NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 April 2017

# சமூக சேவை மேம்பாட்டுக்கு $2.37 மி. புதிய ஆய்வு நிதி

சமூக சேவைகள் வழங்கப்படும் முறையை மேம்படுத்துவது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள நேற்று $2.37 மில்லியன் நிதி அமைக்கப்பட்டது.

திருமதி லீ சூன் குவான் அறக்கட்டளை ஆய்வு நிதி என்றழைக்கப்படும் இந்நிதியைச் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் கலை, சமூகவியல் துறை அமைத்தது. திரு லீ சூன் குவான் அறநிதி வழங்கிய நன்கொடையைக் கொண்டு ஆய்வு நிதி அமைக்கப்பட்டது.

இங்குள்ள சமூக சேவைத் துறை எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகச் சமூக சேவையாளர்களும் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மேற்கொள்ளும் ஆய்வுத் திட்டப்பணிகளுக்கு இந்நிதி ஆதரவளிக்கும் என்று பல்கலைக் கழகம் வெளியிட்ட செய்தி அறிக்கை தெரிவித்தது.

ஆய்வில் பங்குபெறும் சமூக சேவையாளர்கள், பல்வேறு வகையான உள்ளூர் விவகாரங்களைக் கையாளும் திறனை வளர்த்துக் கொள்ள இயலும்.

தேவை உள்ளோரை சமூக சேவைகள் சென்றடைவதை மேம்படுத்தவும் தகுந்த சேவைகளை வடிவமைக்கவும் ஆய்வின் கண்டுபிடிப்புகள் உதவக்கூடும் என்று பல்கலைக்கழகம் குறிப்பிட்டது.

சேவை பயன்பாட்டாளரின் நலனை மேம்படுத்தவும், சமூகச் சேவை அமைப்புகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான கொள்கை சார்ந்த கலந்துரையாடல்களுக்குத் துணை புரியவும் ஆய்வு உதவக்கூடும்.

புதிய ஆய்வு நிதியைப் பல்கலைக்கழகத்தின் சமூகப் பணித் துறை நிர்வகிக்கும்.

“சிங்கப்பூரின் பல இன மக்களுக்குச் சேவையாற்ற ஆதாரத்தின் அடிப்படையிலான கொள்கைகளை வகுக்கவும், வளங்களைத் திட்டமிடவும், சமூக சேவையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் சமூக சேவைத் துறையில் நடைமுறை சார்ந்த ஆய்வு அதிகமாகத் தேவைப்படுவதால் தகுந்த தருணத்தில்” நிதி அமைக்கப்பட்டிருப்பதாக சமூகப் பணித் துறையின் தலைவர் இணைப் பேராசிரியர் எஸ்தர் கோ குறிப்பிட்டார்.

நிதி உதவிக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு ஆய்வுத் திட்டப்பணிக்கும் $20,000 முதல் $30,000 வரை பெற முடியும். ஒவ்வொரு திட்டப்பணியும் மூன்று ஆண்டுகளுக்குள் நிறை வடைய வேண்டும். ஆய்வுத் திட்டப்பணிகளின் கண்டுபிடிப்புகள் பயிற்சிக்கு அல்லது கற்பிப்புக்குப் பங்களிக்கக்கூடிய சாத்தியமும் இருக்கவேண்டும்.

நிதி உதவிக்கான முதல் விண்ணப்பங்கள் 2018ல் வரவேற்கப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.